**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 87/2014**

**வாதி தரப்பு சாட்சி–1 வெள்ளையம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு படிக்க தெரியும், 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆனால் தற்போது பார்வை குறைபாடாக உள்ளது. உயில் ஆவணத்தில் சர்வே எண் 99/2ல் விஸ்தீரணம் 72 செண்ட்டில் எவ்வளவு நிலம் உயில் எழுதப்பட்டுள்ளது என்பதற்கான முழு விபரமும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 99/2ல் தான் உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சர்வே எண் 99/7A1ற்குத்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் உயில் ஆவணத்தில் சர்வே எண் 99/7 என்பதற்கு பதிலாக சர்வே எண் 99/2 என தவறாக குறிப்பிட்டிருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2) நான் அவ்வாறு எந்த சங்கதியும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் அடியில் கண்ட சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை, நான்தான் பார்த்துக் கொண்டேன், அதனால் பூர்வீக சொத்தை எனக்கு எழுதி வைத்தனர். 4ம் பிரதிவாதி தங்கவேல் நல்லம்ம ரெட்டியாருக்கு என்ன உறவு என்றால் தம்பி மகன். சர்வே எண் 99/7 என்பது தும்மாயி அம்மாளுக்கும், நல்லம்ம ரெட்டியாருக்கும் பாத்தியப்பட்டது அல்ல என்றும், மேற்படி சொத்து நல்லம்ம ரெட்டியாருக்கும் அவரது சகோதரர் போளாச்சி ரெட்டியாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு எப்போது உயில் எழுதப்பட்டது

என்றால் 04.01.1988 ல் எழுதப்பட்டது. 21.01.1988 ல் நல்லம்ம ரெட்டியார் சர்வே எண் 99/7 தனக்குரிய பாகத்தை அவர் சகோதரர் மகனான 4ம் பிரதிவாதி தங்கவேலுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

3) சர்வே எண் 99/7ன் மொத்த விஸ்தீரணம் 55 செண்ட், அதில் தனக்குரிய பாகமான 25 செண்ட் நிலத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் இடம் வேறு என்றும், 4ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இம் வேறு என்றால் சரியல்ல. சர்வே எண் 99/7 ல் நல்லம்ம ரெட்டியார் தனது பாகத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்றதால், மேற்படி சர்வே எண்ணில் எனக்கு எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. நல்லம்ம ரெட்டியார் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குரையோடு தாக்கல் செய்த அ பதிவேடு நகலில் எனது பெயர் இல்லாததால் அதை நான் இவ்வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**